பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 28 | ஜ. ஆகிர் 4 | இதழ் 59
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 10-4-81

## கோப்பாய் எம். பி. தெரிவு நியமனக் குழுவிடம்
### கூட்டணிப் பொருளாளர் 'தர்மர்'

(கொழும்பு)

கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரை நியமிக்கும் பொறுப்பை கட்சியின் தேர்தல் அபேட்சகர் நியமனக்குழுவிடம் விடுவது என்று தமிழர் விடுதலைக்கூட்டணி மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இவ் விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அபேட்சகர் நியமனக்குழுவுக்கு காலஞ்சென்ற திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் இடத்திற்கு மானிப்பாய் எம். பி, திரு. வி. தர்மலிங்கத்தை நியமிப்பதென்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

# சந்தேக நபர்களைத் தேடி
# நாடு முழுவதும் 'வலைவீச்சு'

## பணம் வெளியேறுது தடுக்க தீவிர கண்காணிப்பு
### டி. ஐ. ஜி. மகேந்திரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிக் கொள்ளை தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் தகவல்களைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி நாடுமுழுவதும் சந்தேகநபர்கள் தேடப்பட்டுவருகின்றனர்.

நீர்வேலியில் கொள்ளையடிக்கப்பட்ட 79 லட்சம் ரூபாவும் குறிப்பிட்ட சில இடங்களிலேயே மறைத்துவைக்கப்பட்டுள்ளன. அவை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லப்படாமல் தடுப்பதற்காக சில இடங்களில் ஆயுதப்படையினரும் பொலிசாரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பி. மகேந்திரன் நேற்று மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. மகேந்திரன் மேலும் கூறியதாவது:

"கொள்ளையடிக்கப்பட்ட பணம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதும் பொலிஸார் அப்பணம் வெளியில் செல்லாமல் நான்கு கிராமங்களை தகுந்தபாதுகாப்பு செய்து வருகின்றனர்.

"பொலிஸாரினதும், பாதுகாப்புபடையினரதும், கடும் கண்காணிப்பின் காரணமாகவே, குரும்பசிட்டியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில், ஒரு சிறிய பகுதியுடன், வெளியில்செல்ல குட்டிமணி கோஷ்டியினர் முற்பட்டுள்ளனர்.

வீட்டுக்கு வீடு சோதனை தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவித்த அவர், தேவையான ஆதாரங்கள் கிடைத்த பின்னரே கைதுசெய்யப்படுவார்கள் என்றும் கூறினார். (ச-கு)

## முக்கிய தகவல்களைக் கூற இருவரும் மறுக்கின்றனராம்

(கொழும்பு)

குட்டிமணியுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் சில முக்கிய விடயங்களை வெளியிட மறுப்பதாக அறியப்படுகின்றது.

பனங்கொடை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் நேற்றும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

கொள்ளை, கொலை சம்பவங்கள் தொடர்பாக சில முக்கிய தகவல்களை வெளியிட இவர்கள் மறுத்து வருகின்றனராம். (ம-கு)

## வழமைபோல் "ஈழநாடு" வெளிவரும்

தமிழ், சிங்கள வருடப்பிறப்பை யொட்டி எதிர்வரும் 13-ம் திகதி "ஈழநாடு" ஊழியர்களுக்கு விடுமுறையானாலும் வழமைபோல் பத்திரிகை 14-ம் திகதி வெளிவரும். விளம்பரம் போன்ற அவசரப்பணிகள் வழமைபோல் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

— நிர்வாகி

## சட்டமா அதிபர் ஆஜராக முடியாது

[கொழும்பு]

சட்டமாஅதிபர் தனிப்பட்ட முறையில் ஆஜராக முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு எதிராக கிறாண்ட் சென்றல் லிமிட்டெட்டின் மனுவில் சட்டமா அதிபர் ஆஜராகியிருந்தது தொடர்பாக கிளப்பப்பட்ட ஆட்சேபனையைத் தொடர்ந்தே இத் தீர்ப்புவழங்கப்பட்டது.

நீதிபதிகள் பரிந்த ரணசிங்க, விக்ரர் பெரேரே ஆகியோர் இத்தீர்ப்பை வழங்கினர்

(ம-கு)

### அமைச்சர் லலித் சென்றுபார்த்தார்
## யாழ். சட்ட நூலகத்தினுள் மழை வெள்ளம்!

(யாழ்ப்பாணம்)

கப்பல், வர்த்தகத்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று நண்பகல் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு விஜயம் செய்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். ஜாமிலைச் சந்தித்து உரையாடினார்.

அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் வட பிராந்திய இ. போ. ச. தகுதி வாய்ந்த அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோரும் வந்திருந்தனர்.

அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வந்ததும் யாழ். சட்டத்தரணிகள் சங்க செயலாளர் திரு. ஆர். பால சுப்பிரமணியம் அமைச்சரை சட்ட நூலகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு நின்ற சட்டத்தரணிகள் கைலாகு கொடுத்து அமைச்சரை வரவேற்றனர்.

அமைச்சர் வருவதற்கு சற்று முன்னர் பெருமழை பெய்த

(8 ம் பக்கம் பார்க்க)

### தேர்தல் மேடைகளில்
## எதிர்க்கட்சிகளின் குறைகளை கூறுவதை தவிருங்கள்''
### ஐ.தே. க. வினருக்கு லலித் யோசனை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் கூட்டங்களின் போது மற்றைய 4 கட்சிகளின் குறைகளைக் கூறுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஐ. தே. க. ஆதரவாளர்களை வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கேட்டுக்கொண்டார்.

நேற்று யாழ். கிங்ஸ் ஹவுசில் ஐ. தே. க. ஆதரவாளர்களை சந்தித்து உரையாடினார். அவர் அங்குபேசுகையில் கூறியதாவது:

(8 ம் பக்கம் பார்க்க)

மகத்தான திறப்புவிழா
ஐடியல்ஏஜென்ஸி
8ம் பக்கம் பார்க்க

மங்களகரமான திறப்புவிழா —•
இன்று காலை யாழ்நகர் ஆஸ்பத்திரி வீதியில் 408ம் இலக்க கடையில் புதிய நாகரீக சைவ உணவகம் திறக்கப்படுகிறது.
அமுதசுரபி
யாழ்நகரின் முதல்பிரஜை திரு. இராஜா விசுவநாதன் வைபவத்தை சிறப்பிப்பார்.

ஹோம் பினன்ஸ் லிமிட்.,
82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்
வருடாந்தம் ஆகக் கூடுதலான
25 % வட்டியை
வழங்குகிறது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும். உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்.
கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.
* உஷ்ண காலத்துக்கு உகந்த முதல்தரமான
USHA Ceiling Fan
(உஷா மின் விசிறி)
* உயர்தரமான
"AIWA" கசற் றேடியோ
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3, தொலைபேசி: 89190

-1981

## மா. அ. ச. தேர்தல்

# ஏப். 20 - ஜூன் 11 வரை ஊர்வலங்களுக்குத் தடை

## வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும்

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலுக்கு பிரதி பொலிஸ் மா அதிபர்(குற்றப் பிரிவு) திரு. ஆர். சுந்தரலிங்கம் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

நாடு முழுவதும் 6814 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

இம்மாதம் 20-ம் திகதிமுதல் ஜூன் 11-ம் திகதிவரை எவ்வித ஊர்வலங்களும் நடாத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

அபேட்சகர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் அவரது பெற்றோர், பிள்ளைகள் எவரும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குச் சீட்டுக்கள் எண்ண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும், பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)


# தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## தமிழ்த்திரைப்பட எழுத்துப் பிரதிப் போட்டி நிபந்தனைகள்

இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்படும் தமிழ்த் திரைப்பட எழுத்துப் பிரதிப் போட்டியின் முடிவுதிகதி இவ்வாண்டு ஏப்ரில் மாதம் 20-ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இப்போட்டியில்

முதலாம் பரிசு ரூபா 5,000/-
இரண்டாம் பரிசு ரூபா 4,000/-
மூன்றும் பரிசு ரூபா 3,000/-

வழங்கப்படும். போட்டிக்கான விதிகள் பின்வருமாறு:

1. போட்டிக்கு அனுப்பப்படும் எழுத்துப்பிரதிகள் சிறந்த கதை அமைப்பும், கச்சிதமான வசன ஆக்கமும், முழுமையான காட்சி விளக்கங்களும் கொண்டு உயர்ந்த தரமுடையனவாய் அமைதல் வேண்டும்.

2. எழுத்துப் பிரதி தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவாக எழுதியோ, தட்டச்சுப் பொறித்தோ இருத்தல்வேண்டும். காட்சிகளும், பக்கங்களும் தொடர்பாக இலக்கமிடப் பட்டிருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு காட்சியின் களமும், காலமும் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4 பிரதிகள் வழமையான திரைப்பட எழுத்துப் பிரதி முறையைப் பின்பற்றி அமைதல் வேண்டும். (அதாவது, பாத்திரங்கள் பேசும் வசனங்கள் தாளின் வலப்பக்கத்திலும், அவ்வவ் வசனங்களுக்கேற்ற காட்சி அமைப்பு விளக்கங்கள் அவற்றிற்கெதிரே தாளின் இடப்பக்கத்திலும் எழுதப்படும் முறை)

5. இரண்டு மணி நேரத்துக்குக் குறையாது காண்பிக்கக் கூடிய படம் தயாரிக்கத் தக்கதாக ஒவ்வொரு பிரதியும் அமைந்திருத்தல் வேண்டும்.

6. குறித்த ஒரு சமயத்துக்கோ, சமூகத்துக்கோ, தனிநபருக்கோ, ஆட்சிக்கோ, அரச அங்கங்களுக்கோ அவதூறு விளைவிக்கக் கூடியதாக எழுத்துப் பிரதி அமையக் கூடாது.

7. ஒருவர் எத்தனை திரைப்பட எழுத்துப் பிரதிகளும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கத்திலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

8. இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியிற் பங்குபற்றத் தகுதியுடையவர் ஆவர்.

9. அனுப்பப்படும் எழுத்துப் பிரதிகளிலே எழுதியவரின் பெயர், முகவரி ஆகியன போன்ற விபரங்கள் எழுதப்படல் ஆகாது. அவ்விபரங்கள் தனியே ஒரு தாளில் எழுதிப் பிரதியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

10. போட்டிக்கு அனுப்பப்படும் எழுத்துப் பிரதிகள் அவற்றை எழுதுபவனின் சொந்தப் படைப்பாக அமைதல் வேண்டும். குறித்த பிரதி தனது சொந்தப் படைப்பெனவும், தான் இலங்கைப் பிரஜை எனவும் உறுதிப்படுத்திய கடிதம் ஒன்றும் எழுத்துப் பிரதியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

11. போட்டிக்கானபிரதிகள், "திரைப்பட எழுத்துப் பிரதிப்போட்டிக்கு" எனக்குறிப்பிடப்பட்டு, செயலாளர், தமிழ்த் திரைப்பட எழுத்துப் பிரதிப் பரிசீலனைக்குழு, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், 224, பௌத்தாலோகமாவத்தை, கொழும்பு-7 (The Secretary, Tamil Film Script Evaluation Committee, National Film Corporation, 224, Bauddhaloka Mawatha, Colombo 7, என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்

12 இப்போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே முடிவானதாகும்.

தமிழ்த் திரைப்பட எழுத்துப் பிரதிப் பரிசீலனைக்குழு.

8806


## புலோப்பளை கொலை வழக்கு:

# எதிரியின் பிணை ரத்து!

(பச்சிலைப்பள்ளி)

புலோப்பளை பிராமண இளைஞர் கொலை வழக்கில் 2-ம் எதிரியின் பிணை ரத்துச் செய்யப்பட்டு, அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

புலோப்பளை பிராமண இளைஞரான சா. குகபாலசர்மா என்பவரைகடந்த வருடம் ஜூன் மாதம் 26-ந் திகதி கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை (வயது 18, அந்தோனிப்பிள்ளை (வயது 19) ஆகிய இருவர் மீதும் பளைப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்ற நீதிபதி திரு. ஸி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

எதிரிகள் இருவரும் பிணையில் விடப்பட்டபோது பிரதி புதன், ஞாயிறு தினங்களில் பளைப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் என்று நீதிபதி பணித்திருந்தார்.

முதலாம் எதிரி ஒரு தடவையும், இரண்டாம் எதிரி பதினைந்து தடவைகளும் பிணை உறுதி மொழியினை மீறி பொலிஸ் நிலையத்திற்குக் கையொப்பமிட வரவில்லை என்று பளைப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி முதலாம் எதிரியை எச்சரித்து, இரண்டாம் எதிரியின் பிணையை ரத்துச்செய்து, அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கும்படி பணித்தார்.

இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரரர் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சிறிவாயாவும் ஆஜரானார்கள். பளைப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். சூரியப்பிரகாசம் வழக்கை நடத்தினர்.

# இன்றைய பலன்

பங்குனிமாதம் 28-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(10-4-1981)

மேடம்: திட்டமிட்டுச் செயல்பட விரும்பவீர்கள், எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர், உடலில் சோர்வுக்கு இடமுண்டு.

இடபம்: எல்லாத் துறையிலும் அபிவிருத்தி காணப்படும், மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக்கு இடமுண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.

மிதுனம்: நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும், புதிய முயற்சிகள் இன்று கைகூடும். பேச்சுவன்மையின் மூலம் பொதுத்துறையில் புகழ் அடைவர்.

கடகம்: எதிலும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும், உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு இரகசியமாக மறைவில் சதிகள் நடைபெறக் கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றக் கூடும்.

சிங்கம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும், பொருள்வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும், பொன்னான தினம்.

கன்னி: எதிலும் சோர்வு தென்படும், ஆதரவு காட்டியவர்களே உங்களை அலட்சியப் படுத்துவதற்கு முனைவார்கள், நண்பர்களின் தொல்லைகளால் மனநெருக்கடி தோன்றக்கூடும்

துலாம்: புதிய இடங்களில் இருந்து உங்களுக்கு ஆதரவு வளரும், எதிர்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள், முன்னேற்றமான தினம்.

விருச்சிகம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகப் பெறுவீர்கள், சகதொழிலாளர்கள் மதியில் ஆதரவு பெருகும், குடும்பத்திலும் இனிமையான சம்பவம் உண்டு.

தனுசு: சந்தர்ப்பத்திற்கு ஏற்றவண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு, மேலிடத்து வாழ்த்தும் கிடைக்கக் கூடும்.

மகரம்: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும், சிலர் கடன் தொல்லைகளால் பாதிக்கப்படுவார்கள், ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும், கூட்டுவியாபாரத்தில் சிக்கல்கள் தோன்றலாம்.

கும்பம்: ஆசை வார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள், இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள், நிதானம் விரும்பத்தக்கது

மீனம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னிலையில் நிற்பீர், சொகுசான வாழ்வும் கிடைக்கும், பிறருடைய மதிப்புக்கும் இலக்காவீர்கள். வரவேற்கவேண்டிய தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க.வேலு பிள்ளை

## நல்லை இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்று வரும் யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 23வது தமிழ் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-45 மணி: அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவர்கள் வீணை-பாட்டு, 6-30 மணி திருமதி பூமணி இராசரத்தினம் பாட்டு, திரு. செ. சித்திவிநாயகம் வயலின், திரு. பி சின்னராசா, மிருதங்கம், 7-45 மணி திரு. ராம்குமாரசாமி பாட்டு, திரு. வி. கே குமாரசாமி-வயலின், திரு. ஏ எஸ். இராமநாதன்-மிருதங்கம், 9-00 10-15 மணி திரு. எம், பஞ்சாபிகேசன் நாதஸ்வரம்.

நாளை சனிக்கிழமை செட்டிநாட்டரசர் மு. அண்ணாமலை செட்டியார் நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும். (அ)

## கந்தரநுபூதி நூல்கள் அன்பளிப்பு

(சுழிபுரம்)

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா இருநூறு கந்தரநுபூதி நூல்களை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார், இச்சபையினர் சார்பாக ஆசிரியர் மு. தம்பியையா திரு. க. கனகராசாவிடமிருந்து நூல்களைப் பெற்றுக்கொண்டார்.


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய ஸ்குசு 27 ஸ்ரீ 6704 லொறி விற்பனைக்கு உண்டு. க. சிவபாதசுந்தரமூர்த்தி நவற்கிரி, புத்தூர். 8817

தச்சுவேலையந்திரம் Model C 35 Italy விபரங்களுக்கு உடுப்பிஹோட்டல் 134, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். 8819

முல்லைத்தீவு கோயில் குடியிருப்புப் பகுதியில் சென் மெரிஸ்ரோட் இல் 2 பெரிய அறை ஆப்பீஸ் ரூம், முன் விறாந்தை, பின் விறாந்தை குசினியுடன் கிணறும் சேர்ந்த கல்வீட்டு வளவு 12 பரப்புக் காணியில் அடங்கியுள்ளது. மா, தென்னை போன்ற பிரயோசனங்கள் யாவும் அடங்கிய இவ்வீடு வளவு விற்பனைக்குண்டு. விலை மற்றும் விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்க. M. R. சௌந்தரநாயகம், இல. 1, சென்பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம். அல்லது A. பேதுருபிள்ளை, வியாபார நிலையம், P. W. D. ரோட், முல்லைத்தீவு. (8818)

ஊரெழு ஆலடி ஒழுங்கையில் (பலாலி பிரதான வீதியில் இருந்து 100 யார்) 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. நடராசா, அஸ்பஸ்டோஸ் கொம்பனி, ஈவினை, சுன்னாகம். (8828)

குபோட்டா K 75 உழவு யந்திரம், பெட்டி, உழவு உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; பண்டாரவன்னியன் மில், ஒட்டிசுட்டான். (8834)

இசுசு ELF 250 TLD 53-1974 மொடல் இரட்டைச் சில்லு நீள பொடி. து. கனகரத்தினம், இல. 5, குட்செட் ரோட், வவுனியா. (8837)

9ஸ்ரீ தொடர் பஜாஜ்ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர் 9-4-81 தொடக்கம்காலை 9மணியிலிருந்துமாலை 6 மணி வரை பாலாஸ் ஸ்கூட்டர் வேக்ஸ் 1 2 1/3, விராவி வீதி யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 8830


## றிமான்ட்

(பண்டத்தரிப்பு)

இரவுவேளையில் கடைஒன்றின் ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கி சீனி, பால்மா ஆகிய சுமார் 925 ரூபா பெறுமதியான பொருட்களை திருடியதாக சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லன் துரையினால் கைது செய்யப்பட்ட சுதுமலையைச் சேர்ந்த நபர் ஒருவரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது நீதிபதி அவரை இம் மாதம் 15ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சுதுமலை அம்மன் கோவிலடியிலுள்ள சிவலிங்கம் என்பவரின் கடையில் நடை பெற்ற இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரை அடுத்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லன்துரை அதே இடத்தைச் சேர்ந்த செல்லப்பா நடராசா என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து அவரிடமிருந்து திருடப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி பொலிசாரினால் மீட்கப்பட்டது. சந்தேக நபரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு ரி. ஜோகநாதன் அவரை இம் மாதம் 15ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ஈரானில் 'குர்டிஷ்' பிரிவினருக்கு சட்டபூர்வமான அங்கீகாரம்?

தெஹ்ரான், ஏப் 9

ஈரானிய இஸ்லாமியக்குடியரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திவரும் குர்டிஷ் பிரிவினருக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஈரானிய அரசாங்கம் விருப்பம்தெரிவித்துள்ளது

இவர்கள் ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவிட்டு தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் ஈரான் அரசாங்கம் நிபந்தனை விதித்துள்ளது

குர்டிஷ் ஜனநாயகக்கட்சி என்ற பெயரில் பிராந்திய ரீதியில் சுயநிர்ணய அரசியலுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கோரி குர்டிஷ் மக்கள் ஈரானிய அரசாங்கத்திற்கு எதிராகசுதந்திரப் போராட்டம் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது,

இவர்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கப்படுமென்ற வாக்குறுதியை ஈரானிய புரட்சிமன்றத்தின் பிரதான வழக்குத்தொடுநர் அறிவித்துள்ளார்.

அதேவேளை ஈரானிய உயர் நீதிமன்றத்தின்தலைவர் தங்கள் நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கும் நாடுகளுடன் ஈரான் நல்லுறவை வளர்க்க விரும்புகிறதென்று தெரிவித்துள்ளார். (வெ

## மனிதன் இதுவரை அறிந்திராத மிகப்பெரிய ஒளி நட்சத்திரம்!

பொன். ஏப். 9

மனிதன் இதுவரை அறிந்திராத மிகப்பெரிய ஒளி மிகுந்த நட்சத்திரமொன்றை மேற்கு ஜெர்மன் வான மண்டல ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ராட்சத தொலைநோக்கியொன்றைப் பயன்படுத்தியே இந்நட்சத்திரத்தை இவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

பூமியிலிருந்து ஒரு லட்சத்து 50,000 ஒளி வருஷத்துக்க பால் இந்தப் பார்வை தென்பட்டது.

இந்நட்சத்திரம் சிறு பகுதிகளின் தொகுப்பாக இல்லாமல் ஒரு ஒற்றை நட்சத்திரமென்றே விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்நட்சத்திரம் சூரியனை விட 100 கோடி மடங்கு பிரகாசமானதென்று கணக்கிடப்பட்டுள்ளது. (வெ)

## மக்கள் வங்கியின் புதிய பாதுகாப்புத்திட்டம்

(கொழும்பு)

பணம் கொண்டு செல்லப்படும் வேளைகளில் பாதுகாப்பு அளிக்கும் கடமையில் ஆயுதப்படையினரை உதவியாக ஈடுபடுத்தும் புதிய பாதுகாப்புத் திட்டத்தை மக்கள் வங்கி வெகு விரைவில் அறிமுகப்படுத்தவிருக்கிறது.

துப்பாக்கி ரவை புகாத வாகனங்கள், மிகவும் பாதுகாப்பான பெட்டிகள், பூட்டுக்கள் ஆகியவை பணம் கொண்டு செல்லப்படும் வேளைகளில் உபயோகப்படுத்தப்படும்.

ஆயுதப் படையினரின் தளங்களுடன் தொடர்புடைய வாநொலி தொடர் கருவிகளும் பயன்படுத்தப்படும்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு நவீன இயந்திர வலுவுள்ள துப்பாக்கி கருவிகளை இயக்குவதில் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

மக்கள் வங்கி பாதுகாப்பு ஆலோசகர் திரு. எஸ். ஜி. டி. சொய்சா, மக்கள் வங்கி ஒனிப்பாளர் திரு. ஸ்ரானி சேனநாயக்கா, பிரதி பொலிஸ் மா அதிபர் (குற்றவியல்) திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் அண்மையில் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து புதிய பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. (து)

## அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கொலை, கொள்ளை, குடும்பசிட்டி அடவு கடை கொள்ளைகள் தொடர்பாக அடையாள அணிவகுப்பு இடம்பெறும் பட்சத்தில், தற்போது கொழும்பில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான குட்டிமணி, யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸார் நடத்திய விசாரணையின் போது, சந்தேக நபரான குட்டிமணி நீர்வேலி கொலை, கொள்ளை சம்பவத்தில் நேரடி தொடர்பில்லாதிருந்த போதும், பக்கபலமாக இருந்தார் என்பதும் குரும்பசிட்டி அடவு கடை கொள்ளை நகைகளில் ஒருபகுதியே, சந்தேக நபரானகுட்டிமணியிடமிருந்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதென்பதும் தெரியவந்துள்ளது. மேலும் சந்தேக நபரான குட்டிமணியின் கைரேகை அடையாளங்கள், இக்கொள்ளைச் சம்பவங்களில் கிடைத்த கைரேகை அடையாளங்களுடன் ஒத்திருக்கின்றன என்பது தெரியவந்துள்ளது. அத்துடன் குட்டிமணியிடம் கைப்பற்றப்பட்ட அமெரிக்க டாலர் நோட்டுக்கள் நீர்வேலியில் கொள்ளையடிக்கப்பட்டவை என்று வங்கியினால் இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய நிலையைத் தொடர்ந்து பொலிஸார் அடையாள அணிவகுப்பிற்கு ஏற்பாடு செய்யும் பட்சத்தில் சந்தேகநபரான குட்டிமணி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்வேலி கொலை, கொள்ளை தொடர்பான மரண விசாரணை பூர்வாங்க விசாரணையாக மாற்றப்பட்டு, இம்மாதம் 15-ம் திகதி யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆரம்பமாகவிருக்கிறது.

அடையாள அணிவகுப்பு இடம்பெறும் பட்சத்தில், சந்தேகநபரான குட்டிமணியுடன் மற்றும் சந்தேகநபர்களான தங்கராசா, தேவன் ஆகியோரும் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈரான் ஈராக்கிற்கு சமரசத்தூதுக்குழு

லண்டன். ஏப் 9

ஆறு மாதங்களாக நடைபெற்றுவரும் ஈரான்-ஈராக்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சமரசப்பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக அணிசேரா நாடுகளின் குழுவொன்று பாக்தாத் சென்றுள்ளது.

இக்குழு அங்கு ஈராக் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அங்கிருந்து ஈரான் புறப்படும்,

இக்குழுவில் கியூபா, சாம்பியா, இந்தியா, பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கம்வகிக்கிறார்கள், (வெ)

## மடங்கள், இந்து அறநிலையங்களின் செயற்பாட்டில் திருப்தியில்லை

### அமைச்சர் வீரப்பன்

சென்னை ஏப் 9

"மடங்கள், இந்து அறநிலையத்தாபனங்களின் நிர்வாகத்தை சீரமைப்பது குறித்து தமிழ்நாடு அரசு ஆராய்ந்து வருகிறது. மேற்கண்டவாறு தமிழ் நாடுசெய்தி அறநிலைத் துறையமைச்சர் திரு, ஆர். எம். வீரப்பன் மன்னார்குடியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது தற்போது இவை செயல்படும் விதம் திருப்திகரமாக வில்லை என்றார். (வெ)

## பார்த்தசாரதியின் மறைவுக்கு இந்திராகண்டனம்

புதுடில்லி, ஏப் 9

"ஒருபெண் தனதுகணவரை இழப்பதே பரிதாபகரமானது. அசாமில் தீவிரவாதிகளின் அறிவற்ற கொடுஞ்செயல் காரணமாக உமது கணவர் உயிரிழந்திருப்பது மிகவும் பரிதாபகரமானது".

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி அசாமிலுள்ள ஜோர்கந் நகரத்தில் தீவிரவாதிகளின் வெடிகுண்டுக்குப் பலியான பிராந்திய ஆணையாளர் ஈ. எஸ் பார்த்தசாரதியின் மனைவிக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார். (வெ)

## போலந்து விவகாரத்தில் சோவியத் தலையீடு!

### பிரதமர் தட்சர் எச்சரிக்கை!

வார்சோ, ஏப். 9

போலந்து உணவுப் பொருட்களை மேற்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்காக இவ்வாண்டு சுமார் 300 கோடி டாலரை செலவிடவேண்டியிருக்குமென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

மேற்கத்தைய நாடுகள் போலந்திற்கு மேலும் கடனுதவியளிக்க முன்வந்தால்தான் உணவுப்பொருட்களை அது இறக்குமதி செய்ய முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதிமார்கிரட் தட்சர் போலந்து விவகாரத்தில் சோவியத் யூனியன் தலையிடுவது குறித்து கடுமையாக எச்சரித்துள்ளார்.

போலந்திலுள்ள மக்களுக்கு தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பூரண உரிமை வழங்கப்படுமென்ற நம்பிக்கையை மேற்குநாடுகள் கொண்டிருப்பதாகவும், எனவே போலந்திற்கு வெளிநாடுகளிலிருந்து ஆபத்துகள் உருவாகக்கூடாதென்றும் திருமதி தட்சர் கூறியுள்ளார். (வெ)

## ஊழியர் சேமலாப நிதிச்சட்டமூலம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாபநிதிச் சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்டமூலத்தை தொழிலமைச்சர் காப்டன் சி. பி. ஜே. செனிவிரத்ன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். (வெ)

## பணம் எடுத்துச் செல்ல ஆயுதப்படையினர் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கிகளுக்குப் பணம் எடுத்துச் செல்லப்படும்போது பாதுகாப்பு அளிக்கும் கடமை ஆயுதப்படையினரைச் சார்ந்தது என்று கொழும்பில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு மாநாட்டில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. டி. பி. வேரப்பிட்டியா தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பொலிசாரே இந்தப் பாதுகாப்பை அளித்துவந்தனர் என்பதும் நீர்வேலி இரட்டைக் கொலை, கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிசாரி இந்த பாதுகாப்பை வாபஸ் பெற்று விட்டனர் என்பதும் தெரிந்ததே.

புதிய திட்டத்திற்கிணங்க அந்தந்தப் பிரிவு இராணுவ அதிகாரிகள், வங்கிகளுக்குப் பணம் கொண்டு செல்லப்படும் போது பாதுகாப்பு அளிப்பர். பெருந்தொகையான பணம் எடுத்துச் செல்லும் வேளைகளில் விமானப் படையினரின் உதவியுடன் ஆகாயமார்க்கமாகவும் பணம் கொண்டு செல்லப்படும்.

நிதி அமைச்சு, கொண்டு செல்லப்படும் பணத்தின் ஒரு சத வீதத்தை ஆயுதப்படையினரின் சேவைக்கான கட்டணமாக வழங்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (து)

## கிராம அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டதால் என்மீது கத்தி வீசப்பட்டது!

### முதல்வர் எம். ஜி. ஆர். கூறுகிறார்

சென்னை, ஏப். 9

கடந்த டிசம்பர் மாதம் மணியாச்சி ரயில் நிலயத்தில் தம்மீது வீசப்பட்ட கத்தி, கிராம அதிகாரிகள் பதவிநீக்கப்பட்டதன் காரணமாகப் பதவியிழந்த முன்னாள் கிராம அதிகாரியொருவரால் வீசப்பட்டதென்று தமக்குக்கிடைத்த தகவல்களிலிருந்து தெரிவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



இச்சம்பவம் தொடர்பாக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பொலிசாருக்கு அளித்த அறிக்கையில் ரயில்பெட்டிக் கதவைத் தான் திறந்தபோது கனத்த பொருள்ஒன்று கதவில் பட்டு வீழ்ந்ததாகவும், அதன் பின்னர் கத்தியும் அதன் உறையும் பந்தோபஸ்து அதிகாரிகளினால் கண்டெடுக்கப்பட்டு முதலமைச்சரிடம் காட்டப்பட்டதாகவும்; இது தொடர்பாக சட்டப்படி நடவடிக்கைஎடுக்குமாறு பந்தோபஸ்து அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கைபொலிசாரினால் திருநெல்வேலி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மணியாச்சி ரயில் நிலையத்தில் முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் மீது கத்தி வீசியதாக சந்தேகத்தின் மீது முன்னாள் கிராம அதிகாரி வீரபராக்கிரமபாண்டியன் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. (வெ)

## புருஷோத்தமனுக்கு றிமாண்ட்!

சென்னை, ஏப். 9

கடந்தமாதம் தமிழ்நாடுஅரசின் தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனின் அறைகளுள் புகுந்து அங்குள்ள பொருட்களைச் சேதப்படுத்தியதாகக் கைது செய்யப்பட்ட புருஷோத்தமன் பொலிசாரினால் நேற்று சென்னை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை பதினைந்து நாட்கள் றிமாண்டில் வைக்குமாறு சென்னை மஜிஸ்திரேட் உத்தரவிட்டார். (வெ)

## பாகிஸ்தானில் 10,000 பேர்கைது!

இஸ்லாமாபாத் ஏப் 9

பாகிஸ்தானில் இராணுவ அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதாக சுமார் 10,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (வெ)

## ஆயுள்வேத மருந்துகளின் விலை அதிகரிப்பு

(சுழிபுரம்)

ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் மருந்துகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்விலைகள் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

குறைந்த செல்வம் படைத்திருப்பவன் ஏழையல்ல. அதிக ஆசைபடைத்திருப்பவனே ஏழை.

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## பயங்கர வன்செயல்கள்

பயங்கரவாதம் பற்றி இந்நாட்டில் மட்டுமல்ல, உலகில் பல்வேறு பகுதிகளிலும் பலவகைப்பட்ட கருத்துக்கள் வெளியாகின்றன.

அமெரிக்காவிலே அரசியல் பயங்கரவாதம் வரலாற்றுமிக்க நிகழ்ச்சியாகும். குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதிகளைக் கொலை செய்யும் முயற்சி பல தடவைகளிலும் கைகூடியிருக்கிறது.

இன்னொரு கோணத்தில் நோக்குவோமானால் அமெரிக்க ஜனாதிபதி றீகனின் கருத்து வேறு விதமானது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரை அவர் பயங்கரவாதிகள், கொலைகாரர்கள், அக்கிரமக்காரர்கள் என்று வர்ணிக்கிறார். பொதுவாக விடுதலை இயக்கங்களில் ஈடுபடுபவர்கள் இந்த வசை மொழிக்கு இலக்காகின்றனர். ஒரேயொரு விதிவிலக்கு. ஆப்கானிஸ்தானில் ஈடுபட்டிருக்கும் பயங்கரவாதிகளை விடுதலைவீரர்களெனக் கணிக்கின்றார் ஜனாதிபதி றீகன்.

பயங்கரவாதத்தை தமது சொந்த எண்ணத்துக்கேற்ப கண்டனம் தெரிவிக்கும் அமெரிக்க ஜனாதிபதி தமது சொந்தநாட்டை நோக்கினால் இன்னொரு கருத்துப் புலனாக வழிபிறக்கும்.

சென்ற மாதம் அமெரிக்காவின் பிரதம நீதியரசர் விடுத்த எச்சரிக்கை அதிர்ச்சியளிக்கின்றது. நிரந்தர அச்சவாழ்வு வாழும் நாம், இன்று பயங்கரவாதத்தினால் அழிவது பெரிதல்ல, அந்த அச்சத்தினால் துவக்கின் துணையுடன் சில மணித்தியாலங்கள் நித்திரை செய்ய முடியாமலிருப்பதுதான் பெரிது.

"நகரிலும், சுற்றுப்புறங்களிலும், கிராமங்களிலும் கூட பயங்கரவாதக்கொள்ளை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துவருகிற"தென்பது அமெரிக்க நீதியரசரின் தெளிந்த முடிவு. கொலை, கொள்ளை, கற்பழித்தல் போன்ற பயங்கரக் குற்றங்கள், சுதந்திர அமெரிக்காவின் சிறப்பைக் கெடுக்கின்றன.

எமதுநாடு இந்தவரலாற்றிலிருந்து என்ன படிப்பினையைப் பெறலாம்? உழைக்கும் வழியைக் கைவிட்டு இலகுவாகக் 'காசடிக்கும்' வழியைத் தேடி தனிப்பட்ட திடீர் இலாபத்தில் மோகங்கொண்டவர்கள், கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற அக்கிரமங்களுக்குச் சற்றும் தயங்கமாட்டார்கள்.

அண்மையில் உருவான தனியார் துறைக்குள்ள கட்டுப்பாடற்ற வர்த்தகம், வியாபாரம், எவரையும் இலட்சாதிபதியாக்க வல்லதென்ற நம்பிக்கை நாளுக்கு நாள், வளர்ந்து வருகிறது. அந்தக் காலத்தில் இடத்துக்கோர் இலட்சாதிபதி, ஊருக்கோர் கோடீஸ்வரன்" இன்று எல்லாரும் தானே' என்ற கருத்துப் பரவலாய்வருகின்றது.

புதுப்பணம் படைத்தவர் வாழ்க்கைமுறை புரட்சியின் ஓர் அம்சம்; கடத்தல்காரரும், கலப்படக்காரரும், கண்ணுக்குள் மண்ணைப் போட்டுப்பிழைக்கும் கபடர்களும் இன்று அனந்தம்.

பொலிசாரின் புள்ளிவிபரங்களை ஆராய்ந்தால் கடந்த வருடம் ஒருவர் இன்னொருவரின் சொத்தை அபகரித்தல் என்றுமில்லாத அளவுக்குக்காணப்படுகிறது. இவ்வருடம் இன்னும் அதிகரிக்குமென்பதை கடைசியாக நடைபெற்ற நீர்வேலிக் கொள்ளை நிரூபிக்கின்றது.

ஆட்சியாளரும், மக்களும் இதுவிடயம் பற்றி புனராலோசனை செய்தல் பயன் தரும்.

## முனிவரும் சுவாமியும்

இம்மாதம் 12-ம் திகதியிலும் அடுத்த மாதம் 22-ம் திகதியிலும் இரண்டு ஞானப் பிரகாசர்கள் மக்களின் அஞ்சலிக்குப் பாத்திரமாகிறார்கள். சைவசமூகம், தமிழ்ச்சமூகம், எங்கள்நாடு, ஏன் அருளையும் அறிவையும் பேணும் அனைத்துலகமே பெருமை கொள்ள வேண்டிய விடயம் இது.

இன்றைய இளைஞர் உலகம் இவ்விரு பெரியார்களையும் இனங்காண வேண்டும் என்பதே எமது வேணவா.

இம்மாதம் 12-ம் திகதி திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் 400 ஆண்டு விழா திருநெல்வேலியில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் ஒரு மகாமேதை; தருக்க கோடரி சைவத்தின் உயிர் நிலையமாக விளங்கும் சைவ உணவுக்கு மாறாக அன்று ஆட்சிபுரிந்த போர்த்துக்கேய அதிகாரியின் கட்டளைப்படி ஒவ்வொரு குடும்பமும் போர்த்துக்கேயருக்கு உணவாக ஒரு பசுவைத் தானம்செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கட்டளையை எதிர்த்து, வெறுத்து வேறெவ்வித பரிகாரமும் முடியாத கட்டத்தில் தமிழ்நாடு சென்று மாபெரும் சைவ, தமிழ்ப் பணிகளில் ஈடுபட்டு தவப் பணியால் முனிவர் குழாமில் முதன்மை பெற்றவர்.

வருகிற மே) மாதம் 22ம் திகதி இலங்கை அரசாங்கத்தால் நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப் படுபவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசராகிய பெரியார். இவர் எங்கள் மத்தியில் வாழ்ந்து சில வருடங்களுக்கு முன் மறைந்தார். கத்தோலிக்க மதத்தின் மதிப்புக்குரிய குருவான இவர் தமது தமிழ்க் கலைக் களஞ்சியத்தால் சர்வதேச புகழ் பெற்றவர்; சமய வேறுபாடுகள் எவ்வாறிருந்தும் அன்னாரின் அரிய தமிழ் ஆராய்ச்சியை வியந்து திருப்பனந்தாள் ஆதீனம் அவருடைய நூல்கள் பதிப்புக்கு நிதிஉதவி செய்ய முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழும் சைவமும் ஆதியாய் இருந்த மொழியும் சமயமும் என்ற கருத்தைத் தமது மொழியியல் ஆராய்ச்சியால் கண்டுபிடித்து உறுதிப்படுத்திய இப்பெரியாரை, பம்பாய் பிரபல புதைபொருளாராய்ச்சியாளர் வணக்கத்துக்குரிய ஹெராஸ் சந்தித்து உரையாட யாழ்ப்பாணம் வந்தது சில வருடங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம்.

முனிவரும் சுவாமியும் தமிழ் மக்களின் தனிப் பொக்கிஷங்கள்.

# மருதடியான் திருப்பாதம் தேரினிற்கண்டு தேறுவோம்

யாழ்ப்பாண நன்னகரில் பல வளம்பொலியும் மானிப்பாயிலே தமதடியார்கள் இட்டசித்திகளைப் பெற்றிடேறுமாறு திருக்கோயில் கொடெழுந்தருளியிருக்கும் மருதடி விநாயகர் என அழைக்கப்படும் கற்பக விநாயகர் அருணுநிதிப் பெருமானுடைய தேர்த்திருவிழா எதிர்வரும் 13-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

— சுவாமிநாதன் தர்மசீலன் —

ஈழவழநாட்டின் வரலாற்றில் மானிப்பாய்ப் பட்டினத்திற்கு என்றுமே தனிச்சிறப்பு உண்டு. இலங்கையின் விடுதலைக்கு வித்திட்ட சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்ற விடுதலை வீரர்களையும் சொற்கலைப் புலவர் சுவாமி ஞானப் பிரகாசர் போன்ற பேரறிஞர்களையும் இந்நாட்டிற்கு நல்கிய பெருமை மானிப்பாய்ப் பட்டினத்திற்கு உண்டு.

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசெல்லாம் சைவ சமயத்தைச் சிரமேற்கொண்டு இவாலய மடாலய வித்தியாலயங்களைத் தாபித்து, சைவசமயத்தின் மகத்துவங்களை நாட்டுவராயினர். இக்காலத்தில் திருகோணமலை, திருக்கேதீச்சரம், நகுலேசர்மலை முதலாம் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கும் பொருட்டு வடநாட்டிலிருந்து அநேக துறவிகள், தவசிரேட்டர்கள், ஞானிகள், சித்தர்கள் முதலானோர் வந்து யாழ்ப்பாண நாட்டில் தங்குவராயினர். இப்படியே ஒரு தவசிரேட்டரானவர் மானியம்பதி மருதடி விக்னேஸ்வரன் தற்போது திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருக மண்டபத்தில் விதானமாய்க் கொண்டு விநாயகரைச் சற்குருவாய்ச் சிந்தித்து வணங்கி வந்தார்.

இம்மகானுபாவர் மருதமரங்களின் கீழேயிருந்து விக்னேஸ்வரன் தியானத்திலிருந்து 'தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் கண்டானேற் பிள்ளையத் தலைவனானுய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்' என்பதற்கிணங்க அவ்விடத்திலே சமாதியாய்விட்டார்.

மகான் சமாதியடைந்த காலத்தில் உன்னத விசித்திர கோபுரங்களோடும் மதில்களோடும் விளங்கிய யாழ்ப்பாண நாட்டின்கண் சுமார் ஆயிரத்தை நூறு வருஷம் தமிழர்கள் பெருநிதிகொண்டு பாதுகாத்துவந்த சைவ ஆலயங்களையெல்லாம் கைசிறிதும் கூசாது தகர்த்துவிட்ட பறங்கியர் காலம் தொடங்கியது. இவர்கள் கிராமங்கள்தோறும் இருந்த கோயில்களையெல்லாம் இடித்து அங்கிருந்த விலையுயர்ந்த விக்கிரகங்களையும் திருவாபரணங்களையும் கொள்ளைகொண்டார்கள். இவ்வகையால் இடிபட்ட கோயில்களில் மருதடியிலிருந்த விநாயகர் ஆலயமும் ஒன்று.

பறங்கியரின் கொடுங்கோன்மை 40 வருஷத்தில் நின்றுவிட யாழ்ப்பாணவரசு ஒல்லாந்தர் கையில் சென்றது.

ஒல்லாந்தர் மார்க்கவிஷயத்தில் அதிகம் ஊக்கம் செலுத்தாமல் பெரும் பொருளீட்டல் நோக்கமாய் வியாபாரத்தில் கவனம் செலுத்தினார்கள். இவர்கள் காலத்திலே

(5-ம் பக்கம் பார்க்க)

## ஹோமியோபதியின் தந்தை டாக்டர் ஹனிமன்

டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்கள் ஆங்கில வைத்தியத்தில் பட்டம் பெற்று புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து ஹோமியோபதி என்று பெயர் சூட்டி வளர்த்தார். இன்று அவருடைய வைத்திய சாஸ்திரம் மிகவும்புகழ்பெற்று உலகெங்கும் அங்கீகரிக்கப் பட்டு உன்னத நிலையை வகிக்கிறது அவரது 226 வது நினைவு தினம் இன்றாகும்.

ஹோமியோபதி வைத்திய முறையை உலகிற்கு அறிமுகம் செய்த டாக்டர் ஹனிமன் அவர்கள் "அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக ஒன்றையும் நம்பி ஏற்றுக் கொள்ளாதே. ஒவ்வொன்றையும் தீர ஆலோசித்து நீயேநீதிபதியாக இருந்து முடிவுசெய்" என்ற அவரது தந்தையின் உபதேசத்தை தாரகமந்திரமாகக் கொண்டுவியாதிக்குமருந்து கண்டுபிடித்தார்.

மனிதர்களின் அபிப்பிராயம் அடிக்கடி மாறக்கூடியவையாதலால் என்றைக்கும் மாறாத

- மு. சிவராசா -

ஒரு உண்மையை அடிப்படையாக வைத்துச் செய்யப்படும் சிகிச்சையே உண்மை வைத்தியமாகுமென்ற முடிவுக்கு டாக்டர் ஹனிமன் வந்தார். இக்கோட்பாட்டிற்கு அமைவதே ஹோமியோபதி வைத்திய முறை.

ஹோமியோபதி வைத்திய முறையில் எவ்வாறு ஒரு வியாதிக்கு மருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை ஹனிமனின் ஆராய்ச்சியில் ஒரு உதாரணத்தை சற்று கவனிப்போம்.

குளிருடன் வரும் முறைச் சுரத்திற்கு "கொயினா" நல்ல மருந்து என்று ஆங்கிலவைத்தியம் கூறுகின்றது. டாக்டர் ஹனிமன் அவர்கள் "கொயினா எப்படி சுரத்தைப்போக்குகிறதென்பதை ஆராய்ந்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### அன்று நடந்தது இன்று நடப்பது

## வாழ்நாளை நிர்ணயிக்கும் முத்தம்

லண்டனில் ஒரு காட்சி அரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆராய்ச்சியாளர் முத்தத்தின் பாதிப்பை வெளிக்காட்டும் ஒரு நூதன பகுதியை ஏற்பாடு செய்திருந்தனர்.

முன்றுக முகச்சவரம் செய்த வாலிபரைக்கொண்டும், தாடி, மீசை வளர்த்த ஒருவரைக் கொண்டும் ஒரு பெண்ணுக்கு முத்தமிடவைத்து, அவளின் இருதயத்துடிப்பைப் பதிவு செய்தனர்.

தாடி, மீசை உள்ளவர் முத்தமிட்டபோது அவளின் இருதயம் விநாடிக்கு 16 முறையும், மற்றவரின் முத்த அணைப்பில் அவளின் இருதயம் விநாடிக்கு 4 முறையும் துடித்தது.

மீசை, தாடி உள்ளவர் முத்தமிட்டபோது அது அவளுக்கு அதிக கிளர்ச்சியை ஏற்படுத்திற்று. இந்த இயல்பு வாழ்நாளைப் பாதிக்கிறது.

முகச்சவரம் செய்தவரின் முத்தத்தால் அதிக உள்ளக் கிளர்ச்சி இல்லையால், வாழ்நாளுக்கு அவ்வளவு கேடு இல்லை என்று இந்த நிபுணர்கள் ஆராய்ந்து முடிவுகட்டினார்கள்.

— வி. கே. நவசோதி

# மக்கள் கருத்து

## புகாரில் உண்மை இல்லை

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தை பரிசோதனை செய்த உணவு கட்டுப்பாட்டதிகாரி, தமது 7-4-80ம் திகதிய கடிதமூலம் நாம் விற்பனை செய்யும் மா தரமுள்ளதென்றும், அம் மாவை நாம் தொடர்ந்து விற்பனைசெய்யலாமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரிசியைப் பொறுத்த வரையில் சங்கம் பல வர்க்கம் கொண்ட அரிசியையும் ஒன்றுக்கு மேல்பட்ட தரம் கொண்ட அரிசியையும் தரத்திற்கும் வர்க்கத்திற்கும் ஏற்றவாறு விலை நிர்ணயம்செய்து விற்கின்றோம். அரிசியையோ அன்றேல் மாவையோ உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்துதான் கொள்வனவு செய்யவேண்டுமென்ற கட்டுப்பாடு சங்கத்திற்கில்லை யாது. தரமான பொருட்களை விலைகுறைவாக உள்ள ஸ்தாபனத்திடமிருந்த கொள்வனவு செய்ய வேண்டுமென்பதுதான் அடிப்படைக்கொள்கையாகும். எனவே யாழ். மாநகர சபை உறுப்பினர் செய்த புகாரில் எதுவித உண்மையும் இல்லை என்பதை சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

பொதுமுகாமையாளர்
(யாழ். பலநோ.கூ சங்கம்)

## தொழுதேன் எனைக்காத்திடு

உடுவில் என்ற நற்பதிக் ண்ணே
கோவில் கொண்டு பக்தருக் குதவும்
ஸ்ரீ மீனாட்சி சுந்தர ஈஸ்வர
நின் விழாக் காணும் கண்களே கண்கள்
நின்றனை நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
நின்னை வேண்டித் தொழுதனன் எனக்கும்
நின்னருள் புரிந்து காத்திடல் வேட்டேன்

— கோபாலசாமி

[உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உற்சவம் கடந்த 8-ந் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 17-ந் திகதி ரதோற்சவம்]

# சுவாமி ஞானப்பிரகாசர் முத்திரை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் மே மாதம் 22ம் திகதி நடைபெறவிருக்கும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவு முத்திரை வெளியீட்டு வைபவத்தை, சுவாமி ஞானப்பிரகாசர் விழாவாகக் கொண்டாட நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முத்திரை வெளியீட்டு விழாக்குழு தீர்மானித்துள்ளது. இவ்விழாவில் சமக பங்களிப்பைத் தர



விரும்பும் மன்றங்கள், கழகங்கள் முன்னறிவித்தல் கொடுத்துத் தமது பிரதிகளை இம் மாதம் 23ம் திகதி யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெறவிருக்கும் திட்டமிடல் கூட்டத்திற்கு அனுப்பி வைக்கும்படி இக்குழு கேட்டுள்ளது.

பேச்சுப் போட்டி

இவ்விழாவையொட்டி அகில இலங்கை ரீதியாக ''சுவாமி ஞானப்பிரகாசரின் மறைத் தொண்டும், மொழித் தொண்டும்'' எனும் தலைப்பில் 7 நிமிடங்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெறும். இறுதிப் போட்டி யாழ். நகரில் நடைபெறும். பேச்சுப்போட்டிகள் 10—15 வயதுக்கு இடைப்பட்டோர், 15—20 வயதுக்கும் இடைப்பட்டோர் என்று இரு பிரிவுகளாக நடாத்தப்படும். தேர்வுப் போட்டியில் கலந்து கொள்வோரிடமிருந்து இம் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கவியரங்கம்

விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக ஒரு மணி நேரக் கவியரங்கம் இடம் பெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் கவிஞர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கவிதைகள் ''சுவாமி ஞானப்பிரகாசரின் மறைத் தொண்டும், மொழித் தொண்டும்'' எனும் தலைப்பில் 6 நிமிடங்களுள் படிக்கக்கூடியதாக இயற்றப்படுதல்வேண்டும். விண்ணப்பங்களை செயலாளர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முத்திரை வெளியீட்டு விழாக் குழு, த. பெ. எண் 2, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## சிரமதானமூலம் விளையாட்டுமைதானம் புனரமைப்பு

(துணுக்காய்)

யோகபுரம் மல்லாவி மகா வித்தியாலயத்தின் விளையாட்டுமைதானத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இச் சிரமதான வைபவத்தில் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள், பழையமாணவர்கள் கிராம முன்னேற்றசங்கங்களின் இளைஞர்கள் யுவதிகள் ஆகியோர் ஒன்றுசேர்ந்து சிரமதானத்தை மேற்கொண்டனர். இதன் மூலம் பாடசாலைவிளையாட்டு மைதானம் திருத்தம்செய்யப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது. இச்சிரமதான வைபவத்துக்கு பாடசாலை அதிபர் திரு. க. சிவபாலன் தலைமைதாங்கினார்.


## நீர்ப்பாசன ஊழியர் வேலைஇழக்கும் அபாயம்

(துணுக்காய்)

வவுனிக்குளம் பாரியநீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் பணியாற்றும்நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்கள் வேலை இழக்க வேண்டிய பரிதாபநிலைக்குள்ளாகியுள்ளார்கள். இப்பிரதேசத்தில் இம்முறை மழையின்மையால் நீர்ப்பாசனவேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்
BASF
குமுலுஸ் எஸ்
நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது



இது ஒரு
''மேற்கு ஜெர்மனி 'BASF''
தயாரிப்பாகும்.
குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50
கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்
M LIMITED மக்வூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ். கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5
METROPOLITAN

திருநகர் இரட்டைக்கொலை வழக்கு:

# 'எதிரியைமடக்கிப்பிடித்து பொலிஸில்ஒப்படைத்தேன்'

(யாழ்ப்பாணம்)

''இறந்தவரில் ஒருவர் ரோட்டில் கிடந்தார். மற்றவர் அருகில் வேலியோடு கிடந்தார். இறந்தவர் இருவரும் சகோதரர்கள். எதிரியை மடக்கிப் பிடித்துபொலிஸில் ஒப்படைத்தேன். அவரைப் பிடிப்பதில் எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை''

கிளிநொச்சி திருநகர் இரட்டைக்கொலைவழக்கில் சாட்சியமளித்த நாகலிங்கம் மோகன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 79 மே 29ம் திகதி திருநகரில் அண்ணாமலை இராமலிங்கம் என்பவர், கனகர் இரத்தினசிங்கத்தையும் அவரது சகோதரர் கனகர் அரசரத்தினத்தையும் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி பி கயிலாயநாதன், சட்டத்தரணி சிவநேசன், சட்டத்தரணி செல்வி எம். சின்னராணியின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி மோகன் பீரிஸ் ஆஜரானார். நாகலிங்கம் மோகன் மேலும்கூறியதாவது;

''நான் காணும்போது மற்றொருவருடன் எதிரி போனார். நான் போனதும் எதிரி எதிர்ப்புக்காட்டினார் நான் கையைப் பிடித்துக் கத்தியை எடுத்தேன் அந்த நேரத்தில் இராமசாமி வந்தார் அவர் வந்து எனக்கு உதவினார். அப்போது நானும் எதிரியும் இராமசாமியுமதான் நின்றோம். எதிரியுடன் நின்ற மற்றவர் ஒன்றும் செய்யவில்லை.

'எதிரியின் சேட்டைக் கழற்றி, கையைக்கட்டி எதிரியை பொலிஸ்நிலையம் கொண்டுசென்றேன். எதிரியிடம் மான்பிடி போட்ட ஒரு கத்தி இருந்தது இங்கு காட்டப்பட்ட கத்தியாக அது இருக்கும். இறந்த இரத்தினசிங்கம், அரசரத்தினம் ஆகியோரின் குடும்பங்களைத் தெரியும்''

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும். (க)

## மருதடியான் திருப்பாதம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டைமண்டலத்தில் நடந்த ஓர் இராச கலகத்திற்கஞ்சி அநேக வேளாண் குடும்பத்தினர் புறப்பட்டுவந்து வட்டுக்கோட்டை, காரைநகர் முதலிய இடங்களில் குடியேறினர். இவர்களில் ஒரு பிரமச்சாரிய ஒழுக்கம்பூண்ட தியாகராசக் குருக்கள் என்பவர் தனிமையாய் வந்ததையால் நவாலி வயல்களிலிருக்கும் தூக்கிணி வைரவர்கோவிலடியல் வந்து தங்கநேரிட்டது.

ஒரு பெரியவர் வரலாறு

இத் தூக்கிணி வைரவர் கோவிலிலிருந்து ஒரு வருஷம் வரையிற் சிவபூசை வணக்கம் செய்துவரும் நாட்களில் வருடந்தோறும் நடந்துவரும் வைரவ மடையும் வேள்வியும் கிட்டிவந்தன. பெரியவர் இக் கோவிலிற் பெருந்தொகை ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட்டார். அதனை வெறுத்த பெரியவர் அவ்விடம்விட்டுநீங்கிக் கீழ்த்திசை நோக்கிச் சென்று மானியம்பதியில் உள்ள மருதஞ் சோலையை அடைந்தார் இச் சோலைக்கு அணித்தாயுள்ள காணிகள் மானியம்பதி சுவாமிநாத முதலியாருக்குரியன.

இவ்விடம் சமய சம்பந்தமான வழிபாட்டிற்கு உரிய புண்ணிய தோற்றத்தை உடையதால் இருந்தது பற்றிப் பெரியவர் இங்கே தங்கியிருப்பதற்கு ஆவல் கொண்டு அதற்குரிய வசதியேற்பாடுகள் செய்யும்படி மேற்படி முதலியாரிடம் வேண்டினார். அவர் அவ்வேளையில் இராசஉத்தியோகம் வகித்திருந்தவராகையால் அரசாட்சியாளருக்குரிய மக்கோணத்திடல் என்னும் நிலத்தை அவர்களிடம் பெற்றுத் தியாகராசக்குருக்களை அதில் அமர்த்தினார். இந்நிலத்திலே இரண்டு பனைகளும் ஓர் வேப்ப மரமும் நிற்க அவைகளை வெட்டி ஒரு சிறு வீடு கட்டிச் சீவித்திருந்தார். இப்படி இருந்து வரும் நாட்களில் இவ்விடத்தில் அநேக சனங்கள் பொங்கல் வணக்கம் செய்து வந்தார்கள். அங்ஙனம் அவர்கள் செய்துவரும் உற்சாகத்தைக் கண்டு அன்பர்கள் உய்யுமாறு ஓர் விநயகர் சிலையை வைத்து பூசாக்கிரமங்கள் செய்து வந்தார்.

அப்பால் மருதடியில் விநாயகமூர்த்தியின் நித்திய நைமித்திகங்கள் ஒழுங்காய் நடந்துவந்தன தியாகராசர் மருத மரத்தின் கீழ்த்திசையில் விநாயகர் சிலையை வைத்து பூசை செய்து வரும் நாட்களில் திருக்கோவில் கட்டி மகோற்சவம் நடாத்த உத்தேசித்தார் விநாயகர் அருளை முன்னிட்டு சுவாமிநாத முதலியாரின் உதவி கொண்டு மருத மரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிருகமும், அர்த்த மண்டபமும் கட்டி முடித்து எஞ்சிய கோயிற் பாகங்களை மரந்தடிகளால் உருவாக்கிப் பங்குனி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பித்தார் இப்போது வருஷத்திலே பங்குனி மகோற்சவம் ஆரம்பமாகி பதினெட்டு நாட்களாய் விசேஷ திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்று சித்திரை மாதம் முதலாம் திகதியில் புதுவருஷம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது. எதிர்வரும் 13-ந் திகதி திங்கட்கிழமை புதுவருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப்பெருமான் அதி உன்னத விசித்திர அலங்காரம் அமைக்கப்பெற்ற இரதத்தில், ஏறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர்.

## வானொலிஅதிகாரி இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் வர்த்தக சேவைக்குப் பொறுப்பான அதிகாரி திருமதி பொன்மணி குலசிங்கம் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வானொலியில் எல்லாத் தமிழ்ச் சேவைகளுக்கும் பணிப்பாளராக இருந்த இவர்; அண்மையில்தான் தமிழ் வர்த்தக சேவைக்கு மட்டும்பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். இப்போது இந்தப் பொறுப்பிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

(து)

## ஹோமியோபதி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் தானே கொயினாவைச் சாப்பிட்டுப் பார்த்தார். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு குளிர்நடுக்கலுடன்சுரம் ஏற்பட்டது. அச்சுரம் கொயினா சாப்பிட்டதனால்தான் ஏற்பட்டதா அல்லதுசாதாரணமாகத் தோன்றியதா என்ற சந்தேகத்தினால் அவர் தன் நண்பர்கள் சிலருக்கு இதேபோல் கொயினாவைக் கொடுத்து அவர்களுக்கும் சுரம் ஏற்பட்ட பிறகே கொயினாவை நிறைய உட்கொண்டால் குளிர்முறை சுரம் ஏற்படுமென்பதை நம்பினார். இவ்விதமாகப்பலமருந்துகளைக்கொண்டு பல வருடங்கள் ஆராய்ச்சி செய்த பின்னரே ஹனிமன் அவர்கள் பின்வரும் உண்மையை வெளியிட்டார்கள்.

ஒவ்வொரு மருந்தும் மனித உடலில் ஒவ்வொருவிதமான வியாதிக்குறிகளை உண்டாக்குகிறது. மருந்தின் பலம் அதிகமாய் இருந்தால்அதனால் உண்டாக்கப்படும் வியாதிக்குறிகளும் கடுமையாய் இருக்கின்றன. நாட்பட்ட வியாதிகள் திடீரெனத் தோன்றும் மற்றொரு வியாதியினால் குணம் செய்யப்படுகிறது என்பது சில சமயங்களில் இயற்கையாய்ஏற்படுகிறது, அதாவதுஒருவியாதியில் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள மருந்தை உபயோகிக்க வேண்டும். அதனால் வியாதி நீங்கும். இதுவே ஹோமியோபதி வைத்திய முறையின் தத்துவம்.

ஹோமியோபதி வைத்திய முறை மிகச்சிறந்தது. உலகில் இதுவரை கண்டு பிடித்துக் கையாளப்பட்டுவரும் எல்லா வைத்தியமுறைகளையும் விட மேலானது.

## ஸ்கைலாப் விளையாட்டுக் கழகத்திற்கு முதலிடம்

(புளியங்குளம்)

மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராமசேவை அலுவலகர் பிரிவுகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் வவுனிக்குளம் குலசிங்கம் விளையாட்டு அரங்கில் நடைபெற்றபோது ஸ்கைலாப் விளையாட்டுக் கழகம் முதலிடம் பெற்றது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஒஸ்டின் ஜயவர்த்தன கலந்து கொண்டார். பாண்டியன்குளம் உதவிஅரசாங்க அதிபர் திரு க குலேந்திரா தேசியக் கொடி ஏற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிக்கான ஒழுங்குகளை விளையாட்டு அதிகாரி திரு. இ. துரைசிங்கம் மேற்கொண்டிருந்தார்.

## கரையொதுங்கிய இனந்தெரியாத சடலம்

(மன்னார்)

தலைமன்னார் உப்புத்தரவை கடற்கரையில் இனம் தெரியாத மனித சடலம் ஒன்று கரையொதுங்கியிருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

இச் சடலம் தலைமன்னார் அரசினர் வைத்தியசாலையில் வைத்து பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. மரண விசாரணை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி ஜனாப். எம் பி ஏ ஜப்பார் ஜே பி. நீரில் மூழ்கி மூச்சுத்திணறியதால ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்.

இச் சடலம் இந்திய மீனவரின் சடலமாக இருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகின்றது.

(அ)

# துர்மதி வருடம் உங்களுக்கு எப்படி?

**சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை**

மேடம்: விவசாயிகள்விருத்தியும், வணிகர்களுக்கு வளமான திருப்பமும், தொழிலாளர்களுக்குப் பெருமையும், அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டமான சம்பவம் நிகழ்தலும் வாகனச்சொந்தக்காரர்களுக்கு வெற்றியுமுண்டு. கைத்தொழில், கடற்றொழில் புரிபவர்களுக்கு வளமான வருமானம் உண்டு. இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு 19-9-1981ன் மேல் சிறப்பான காலமாக அமையும். உத்தியோகஸ்தருக்கு இடமாற்றம் உண்டு.

இடபம்: விவசாயிகளுக்கு வேண்டுவன கிட்டும். வனிதையர் வாழ்வில் வளமானதிருப்பமுண்டு. குடும்பத்தில் மக்கள் குதூகலம் காண்பர், அரசியல் வாதிகள் அகமகிழ்வு காண்பர். பதவியிலுள்ளோர் உயர்வு பெறுவர். கடற்றொழில்புரிவோருக்கு கணிசமான வருவாயுண்டு. கல்விகற்றோர் சித்தியடைவர்.

மிதுனம்: வாகனஇயக்குநர்களுக்கு வருவாயில் மந்தநிலை தென்படும். வணிகர்களாயின் வருவாயில் நஷ்டம்காண்பர். குடும்பஸ்தர்களாயின் பொறுமைவேண்டும். பூமிப் பிணக்கும், பொன் பொருள் விரயமும் உண்டு. காதலர்களுக்கு இது ஒரு சோதனை காலமாகும் மாணவர் மத்தியில் மந்தநிலை தென்படும். விடாமுயற்சி விரும்பத்தக்கது உத்தியோகத்தர்களாயின் நிதானம் வேண்டும்.

கடகம்: அரசியல் கடமையாற்றுவோருக்குக் கண்ணியம் தேவை. பிறரை நம்புதல் விரும்பத்தக்கதல்ல. எதிர்பாராதசோகம் இல்லறத்தில் உண்டு. காதலர் வாழ்வில் கவனம் தேவை; இன்றேல் களங்கம் உண்டு. கன்னியர்கள் தனிவழிநாட்டம் தவிர்க்கப்படல் நன்று. கைத்தொழில் புரிவோருக்கு நிதானம்வேண்டும். வணிகர்கள் முதலீட்டைத் தவிர்க்கவும்.

சிங்கம்: காதல்உலகில் கனிவான நிகழ்ச்சிகள் இடம் பெறும். கன்னியர் கனவு நனவாகும். கைத்தொழில், சமத்தொழில் முன்னேற்றம் காணும். பாடகர்கள் பரிசு பெறுவர். ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் குடும்பத்தில் குதூகலம் குளிர்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வு உண்டு கல்விகற்போர் கணிசமான முன்னேற்றம் காண்பர்.

கன்னி: குடும்பத்தில் கோணல் தோன்றும் நிதானம்வேண்டும். பெண்கள் உள்ளத்தில் புளுக்கம் தோன்றும். எண்ணத்தில் நிதானம் வேண்டும். விகிதர்களுக்கு இடமாற்றம் உண்டு. கல்விகற்போர் கவனம்செலுத்தின் கணிசமான வெற்றியுண்டு. கைத்தொழில், கடற்றொழில்புரிவோர் நிதானம் வேண்டும். விவசாயிகளுக்கு மந்தநிலை தோன்றும்,

துலாம்: பேச்சுவன்மையால் பெரியவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இல்வாழ்க்கை கற்கண்டாக இனிக்கும் காதலுலகில் சஞ்சலப் படுபவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். சிலர் வாழ்க்கையில் திடீர்த் திருமணத்திற்கும் இடமுண்டு. எழுத்தாளர்களுக்கு ஏற்றம் மிக்ககாலம், கல்வித்துறையில் வரவேற்கத்தக்க சூழ்நிலை உருவாகும்,

விருச்சிகம்: இவ்வாண்டு சமயோகமான காலமாகும். பிள்ளைப் பேச்சினால் பெரும் செலவுஏற்படினும் பெருமைக்கும் இடமுண்டு வாய்வுக் கோளாறுகளினால் சிலர் பாதிக்கப்படுவர். மனை வாழ்வில் அமைதி நிலவும். தொழில் துறையில் விடாமுயற்சி வெற்

(7ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்திய பீட 2-ம் வருட பரீட்சைமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களின் 2-வது ஆண்டுப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

சித்திபெற்றோர் விபரம் வருமாறு:-

### சித்தி

#### முதலாம் வகுப்பு

செல்வி எப் ஜி அந்தோனிப்பிள்ளை (சிறப்புச்சித்தி -சரீரசாஸ்திரம், உடல் கூறு, உயிர் இரசாயனம்), செல்வி எம். ஜே. பி. அருளானந்தம் (சிறப்புச்சித்தி- உடல்கூறு, உயிர்விஞ்ஞானம்), செல்வி கே சந்திரசேகரம் (சிறப்புச்சித்தி- உயிர் இரசாயனம்), கே. மகேந்திரராஜா (சிறப்புச்சித்தி- உயிர் இரசாயனம்), செல்வி எஸ். நவரத்தினம் (சிறப்புச் சித்தி-உடல் கூறு, உயிர் இரசாயனம், சரீரசாஸ்திரம்).

#### இரண்டாம் வகுப்பு

செல்வி எஸ். பவானி (சிறப்புச்சித்தி-உயிர் இரசாயனம்), செல்வி சி. கணபதிப்பிள்ளை (சிறப்புச்சித்தி - சரீரசாஸ்திரம்), பி. குலத்துங்க சோமேசன், செல்வி வி. மயில்வாகனம், செல்வி எம் ஜே. ஆர். பிலிப்புபிள்ளை (சிறப்புச் சித்தி சரீரசாஸ்திரம்), ஆர். ரவிச்சந்திரன், செல்வி எஸ். ரூபராணி, எம். சக்திபாலன், செல்வி என் செல்வத்துரை (சிறப்புச்சித்தி - சரீரசாஸ்திரம், செல்வி எம். சிதம்பரநாதன், செல்வி ஜி. சிவநாராயணமூர்த்தி (சிறப்புச்சித்தி- சரீரசாஸ்திரம்), செல்வி எஸ் சிவராஜா, செல்வி கே. துரைசாமி, செல்வி ஏ. எம். வாஸ், கே எம். விஜயானந்த, ஏ. யோகனந்தமூர்த்தி, எஸ். ஆனந்தசிவம், பி. அனுரா, செல்வி எஸ். அருந்தவநாதன், பி. கநாயகபாகு, கே. ஈ. கருணாகரன், ஏ. கிருஷ்ணராஜன், செல்வி பி பவானிதேவி, எஸ். ரவிராஜ், செல்வி ஈ. சத்யபாமா, செல்வி கே. சண்முகம், செல்வி கே. சிவகணேசமுருகமூர்த்தி, கே. சிவசுதன், ஜி சுபகுமார், செல்வி ரி. சுப்பிரமணியம், செல்வி வை. சுந்தரப்பிள்ளை, செல்வி கே. தட்சணாமூர்த்தி, செல்வி எஸ் விவேகானந்தன், பி. எம் ஈஸ்வரராஜ், கே. இளங்கோ, ஆர். ஜி. மரியதாஸ், செல்வி ரி. பஞ்சசீலா, செல்வி ஆர். வி. புஷ்பராஜா, செல்வி ஜே. இராசையா, செல்வி கே. சோமசுந்தரம்.

### நூனசித்தி

செல்வி எஸ். அன்னலிங்கம், செல்வி எம். ஐ என். கிறிஸ்தோப்பர், ஏ. டலஸ் டலீமா, ஜே ஜி ஈப்பன், செல்வி ஜே. சி. சி பெர்னாண்டஸ், ஜே. ஈ. ஆர். லெனு, எஸ். மனோகரன், கே. பரமானந்தம், செல்வி கே. சத்தியபாலன், சி. சேபநாயகம், செல்வி ஆர். சண்முகராஜா, எஸ். சூரியபாலன், ரி. சுவர்க்கலோகநாதன், ஏ. தில்லையம்பலம், வி. திவாகர், எஸ். தியாகராஜா, வி. துரைராஜன், செல்வி ஏ. துரைசிங்கம், கே. உசீகரன், செல்வி எல். எம். அருளானந்தம், செல்வி எம். ஈ. அந்தோனிப்பிள்ளை, செல்வி கே. சபாநாயகர், செல்வி எஸ். கனகசபாபதி.

### மீள நூனசித்தி

செல்வி ஏ. ச. கிறீனி.


(இப்பெறுபேறுகள் பல்கலைக்கழக செனட் சபையால் உறுதிப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்து வெளி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் இம் மாதம் 13 ம் திகதி மாலை நிலையத் தலைவர் திரு இ. குலசேகரம்பிள்ளை தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சு.
அரசாங்க அங்கீகாரம் பெற்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கான லொத்தர்



பரிசாக வழங்கப்படும், கொழும்பு7, புல்லேர்ஸ் ஒழுங்கையிலுள்ள வீடு

வெல்லுங்கள்
5 ரூபாவிற்கு 10 லட்சம் பெறுமதியான சொத்து
செவன லொத்தர் சீட்டிழுப்பில்
இலங்கையின் ஈடிணையற்ற முதன்மையான லொத்தர்.


அத்துடன் கம்உதாவ 81 கண்காட்சி லொத்தரில் சிறந்த பல பரிசுகள் -
ஒரு டிக்கற் 2/= ரூபாய்

விரும்பிய டிக்கட்டைத் தெரிவு செய்யுங்கள் ஆனால் இரண்டினையும் வாங்குவது சிறந்தது



றெனோல்ற் 18 ரி.எல் கார்
ஐ.எம்.ரி 542 டிராக்டரும்
பார்மர்ஸ் டிரெயிலரும்,
ஹொண்டா மோட்டார் சைக்கிள்,
சிசில்ஆர் 60 குளிர்சாதனப் பெட்டி,

20 ஃப்ளீ பீஜன் பைசிக்கிள்கள்
றோயல் டோல்ரன் குளியலறை உபகரணங்கள்,
51 செ.மீ ஹித்தாச்சி கலர் டெலிவிஷன்




கம்உதாவ இயக்கத்தின் 3வது ஆண்டுநிறைவைக் கொண்டாடுமுகமாக திஸ்ஸமகராமவில் நடைபெறும் கம்உதாவ 81' மாபெரும் கண்காட்சியின் இறுதிநாளான '81 ஜூலை 3ம் தேதி பி.ப 5 மணிக்கு சீட்டிழுப்பு நடைபெறும்

நமக்கென ஒரு இல்லம் மேலான இன்பம்

இரண்டு லொத்தர்களுக்குமான டிக்கட்டுகள் இப்பொழுது விற்பனையாகின்றன


PHOENIX

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
4-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

மனோகரா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் | சாந்தி மட்டுநகர்
தினசரி 4 காட்சிகள் | தினசரி: 1-30, 5-00, 9-30



● பாக்கியராஜ் ● ரதி ● சதிஸ்ரீ
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

## பாலர் கல்வி நிலையம்

(துணுக்காய்)

நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலையத்தாரின் ஆதரவில் இங்குள்ள சிறுர்களின் கல்வி அபிவிருத்தி கருதி பாலர் கல்வி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது காந்தி சனசமூக நிலைய மண்டபத்தில் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இக் கல்வி நிலையத்தின் ஆசிரியராக செல்வி மு சசீஸ்வரி கடமையாற்றுகிருர்.

## புதிய கிராமசேவை அலுவலர்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரிவுக்கான புதிய கிராமசேவை அலுவலராக திரு. கு ஞானேஸ்வரன் நியமனம் பெற்றுள்ளார். சமூக சேவையாளரான இவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவருமார்.

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
WINTER KILLS

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பெரியஇடத்து பெண்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணத்தோட்டம்
(புதிய பிரதி)

வெஸ்லி (சாவிப்பசமி)
தினசரி 6-15, 9-30;
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
தீபம்
(புதிய பிரதி-ஈஸ்ட்மன் [கலர்)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது வாரம்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்: 881 (கலர்)



தவக்கால நற்சிந்தனை

## சிலுவையில் இயேசு

சிலுவை நிகழ்ச்சியும், சிலுவையில் இயேசு கூறிய வார்த்தைகளும் நமக்கு நற்சிந்தனைகளைத் தூண்டுகின்றன.

சிலுவையில் தொங்கிய வேளை, கிறிஸ்து தன்னையே பலியாகக் கையளிக்கிருர். கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஒரு நிறைவுள்ள பலியாகவும் உள்ளது. பழங்காலத்திலும் பலியானது நமக்கு இறைவனது இரக்கத்தையும், அருளையும் பெற்றுத்தரும் சாதனமாகக் கருதினர். அவ்வாறே இயேசுவும் உன்னத குருவாகவும், பலிப் பொருளாகவும் விளங்கினுர்.

விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் இடையே பாலமாக விளங்குகிருர். அவர் வழியாக மனிதர்கள் இறைவனை அடைகின்றனர். அவர் வாயிலாக இறைவன் மனிதருக்குத் தமது அருளை வழங்குகிருர்.

இயேசுவின் சிலுவை நிகழ்ச்சியும், கல்வாரிப் பலியும் திருச்சபையினதும் கிறிஸ்தவனதும் வாழ்வின் ஊற்றுாவும் விளங்குகிறது. கல்வாரியில் இயேசு ஒப்புக்கொடுத்த குருதி இறைமக்களின் பருகும்நீராக மாறுகிறது.

திருச்சபை தன் மக்களுக்கு திருப்பலி வழியாகவும், அருட்சாதனங்களினூலும் இயேசுவின் சிலுவைப் பலியின் பயன்களை, அருட்கொடைகளை வழங்கிக்கொண்டிருக்கிறது. நாமும் இவற்றைப் பெற்றுப் பயன் பெறுவோம்.

—அருட்திரு மேரி பஸ்ரியன்

## வருடாந்த மகோற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாணவிடை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 20-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வேட்டைத்திருவிழா 27-ம் திகதியும், தேர்த்திருவிழா 28-ம் திகதியும், தீர்த்தோற்சவம் 29-ம் திகதியும் நடைபெறவுள்ளது.

தீர்த்தோற்சவத்தன்று கடந்த 69 ஆண்டுகளாக சிவக்கண்டு மருதப்பு சுவாமிகளால் இவ்வாலயத்தில் கொண்டாடப்பட்ட திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை இம்முறை பொதுமக்களின் உதவியுடன் ஆலயபரிபாலன தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படவுள்ளது.

வேட்டைத் திருவிழாவன்றிரவு விசேட நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## பழைய மாணவர் தினம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர்சங்கத்தினமும், வருடாந்த விழாவும் நாளை நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் ஆ. இராமசாமி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பலர் சிறப்புரையாற்றவுள்ளனர். சிறப்புரை நிகழ்ச்சியை அடுத்து புதுவருட உறுப்பினர் தெரிவு, மதியபோசன விருந்து, கலந்துரையாடல் ஆகியன இடம் பெறவுள்ளன.

## குளத்தில்விழுந்து மரணம்

(பச்சிலைப்பள்ளி)

குளக்கரையினுல் சென்ற வயோதிபர் ஒருவர் குளத்தில் வீழ்ந்து மரணமானுர்!

பளை தம்பாகமம் என்னுமிடத்திலுள்ள திரு. சி. செல்லையா (வயது 80) என்னும் வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்.

பளைப்பொலிஸ் சார்ஜென்ட் திரு. வே. தங்கவடிவேல் சாட்சியங்களை ஆஜர்செய்தார். பளைப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. குமாரவேலு மரணவிசாரணையை நடத்தி விபத்துமரணமெனத் தீர்ப்பளித்தார்.

## சிரமதானம்

(சுழிபுரம்)

சுழிபுரம்—பருளாய் பகுதிகளை சிரமதான மூலம் துப்புரவு செய்யும் பணியில் அவ்வூர் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## துர்மதி வருடம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத் தேடித்தரலாம். கல்வியில் புதிய ஆர்வம் பிறக்கும். பிறருக்கு உதவுவதில் நிதானம் அவசியம். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். அயலவர்களின் ஆதரவு திருப்தியைத்தரும். சந்தேகங்களை நீக்கின் அமைதியான ஆண்டு.

தனுசு: இன்னல்களின் பின்னல்களுக்கும் ஏமாற்றத்திற்கும் இடமுண்டு. எதையும் தாங்கும் இதயம் வேண்டும். தொழில்புரியும் இடத்தில் மறைமுக எதிரிகள் தோன்றுவார்கள். எதிர்பாராதவிபத்து ஏற்படலாம். வாகன இடக்குனர்கள் அவதானமாயிருக்க வேண்டும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும். உஷார் இருப்பின் உரிமைகளைப் பாதுகாக்கமுடியும். இறைநம்பிக்கை நன்மைதரும். ஆண்டின் பிற்பகுதியில் நிலைமை சீரடையலாம்.

மகரம்: தேடிய இன்பம் காலடியில் கிடைக்கும். மேடைப்பேச்சாளர்களும், நடிகர்களும் பெரும் புகழ் அடைவர். சிலர் வாழ்க்கையில் காதல்விவகாரங்களுக்கும் இடமுண்டு. குடும்பஸ்தர்களாயின் உறவுமுறைகள் அதிகரிக்கும் கொண்டதாக அமையும். தனவரவில் திருப்தியான நிலை தென்படுகின்றது. தொழில்மூலம் பெருமைக்கு இடமுண்டு. கல்வி பயிலுவோர் கணிசமான முன்னேற்றம் காண்பர். சிறப்பான ஆண்டு.

கும்பம்: வாழ்க்கை இவ்வாண்டு சிலந்திவலையாகவே காணப்படுகிறது. நிதானமான நடவடிக்கைகளினுல் சிக்கலைத் தவிர்க்கமுடியும். தொழில் துறையில் சாதாரண இடமாற்றம் காணப்படுகிறது. பணவிவகாரத்தில் புதிய பிணக்குகள் தோன்றலாம். வணிகர்களாயின் அதிகமுதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். குடும்ப உறவுமுறைகளில் சுமாரான பலன்களே காணப்படுகின்றன. கல்விபயிலுவோர் கவனம்வேண்டும்.

மீனம்: பிதா வழியால் பெருஞ்சுகம் உண்டு. பெருமை வந்தடையும். வாகனமுள்ளோர் வளம் பல பெறுவர். வணிகர்களுக்கு வருவாய் உண்டு. பாட்டாளிகளுக்குப் பரவச ஆண்டு. உத்தியோகத்தருக்கு உயர்வான ஆண்டு. கலைஞர்கள் போற்றப்படுவர். குடும்பவாழ்க்கையில் குதூகலம் உண்டு. கடற்தொழில், கைத்தொழில்புரிவோர் கணிசமான முன்னேற்றம் காண்பர்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
5 காட்சிகள்
இன்று முதல்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
விசாரணைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் வீட்டிற்குள் வரும்போது நியாயங்கள் வீதிக்கு வருகின்றன! தாய்க்கு குற்றம் குற்றமே என்று சொன்ன அந்தக் குலமகளே குற்றங்கள் செய்யத் தயாரானுள். அப்போ கோமகன் என்ன செய்தான்? ... பாருங்கள் புரியும்
★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா ★ சுந்தரராஜன்
★ சுருளிராஜன் மற்றும் பலர் திறம்பட நடித்த
"ரிஷிமூலம்"
டைரக்ஷன் எஸ். பி. முத்துராமன்
(ஈஸ்ட்மன் கலர்)
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப் படுவதால் நேரம் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்.

பறவைகள் பறந்துவிடும்!............16-ல்
திசைமாறிய பறவைகள் கடைசித் தினம் 16-4-81
சாந்தி (யாழ்நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்

**நியூ கேம்பிறிட்ஜ்**
திருநெல்வேலிச் சந்தி
G. C. E. (A/L) 82
81 August துரிதமீட்டல் வகுப்பு

தாவரவியல் - சிவவீரசிங்கம்
விலங்கியல் - ஜெகானந்தகுரு
இரசாயனம் - அன்ரன் மாஸ்ரர்
பௌதிகம் - விமல்ராஜ்

| | |
|---|---|
| தூயகணிதம் பிரயோக கணிதம் கணக்கியல் | கிருஷ்ணகுமார் பாலாமாஸ்ரர் |

G. C. E. O/L Dec.
ஆரம்பம்: 14-4-81



# ஈழநாடு
**The Eelanaadu**
60 சதம்


அபிவிருத்தி சபைத் தேர்தல்

# கூட்டணி வேட்பாளர்: செயற்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஜூன்மாதம் நான்காம்திகதி நடைபெறும் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களாக விண்ணப்பிக்க விருப்புவோர் தமது மனுக்களை இம்மாதம் பதினாறும் திகதிக்கு முன்னதாக தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் எதிர்க்கட்சி முதல்வரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் வேட்பாளர்கள் நியமனம் பற்றி நீண்டநேரம் ஆலோசிக்கப்பட்டு கூட்டணி வேட்பாளர்களாக விண்ணப்பிக்கவிரும்புவோரிடமிருந்து இம்மாதம் 16-ம் திகதிக்கு விண்ணப்பம் கோருவதென்றும் விண்ணப்டங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகத்துக்கு யாழ்பாணம் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

## 2 வாரங்களுக்கே மின் போதும்

(கொழும்பு)

இரு வாரங்களுக்கு மட்டும் போதுமான மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய நீரே நீர்த்தேக்கங்களில் இருப்பதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது.

## எதிர்கட்சிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கூட்டங்களின் நமது கட்சியின் கொள்கைகளை முன்வைப்பதை விடுத்து மாற்றுக் கட்சிகளின் குறைகளை கூறுவதற்கு மேடைகளை பயன்படுத்தாதீர்கள்.

எமது வழி தேசிய ரீதியிலானது ஐக்கிய இலங்கையை உருவாக்க உழைக்க வேண்டும். என்பதே பிரிவினை ஒருபோதும் கைகூடாது.

"தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளையும் சட்ட ரீதியாக வழங்கிவிட்டோம். சிறிய குறைகள்தான் இருக்கின்றன. அவற்றை பெரிதுபடுத்தக் கூடாது". (கு)


புதுவருடத்தை
முன்னிட்டு எங்கள் ஸ்தாபனம்
**13-4-1981 முதல் 19-4-1981**
**வரை திறக்கப்படமாட்டாது**
என்பதை வாடிக்கையாளருக்கு
அறியத்தருகிறோம்.

TFC த பினுன்ஸ் கம்பனி
லிமிட்டெட்
249/c மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம் போன்:- 7680

எனினும் வாடிக்கையாளர்களின்
வட்டிக் கொடுப்பனவுகள் காசோலை மூலம்
அனுப்பி வைக்கப்படும்.


## யாழ். சட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனுல் சட்ட நூலகம் முழுவதும் ஒரே வெள்ளமாக காட்சியளித்தது. மேசை கதிரைகள் எல்லாம் ஈரமாக இருந்தது.

அமைச்சர் சட்ட நூலகத்திற்குள் சென்று அங்கு தேங்கி நின்ற மழை நீரை பார்த்துவிட்டு "சரியான ஒழுக்காக இருக்கிறதே" என்று கூறி கேலேயும் பார்த்தார் இதன் பின்னர் அமைச்சர் நீதிபதியை சந்தித்து உரையாடினர். (க)

## கோப்பாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது வெளிநாட்டிலிருக்கும் நொத்தாரிசு திரு. கந்தையாவின் இடத்திற்கு பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கத்தை நியமிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு கதிரவேலுப்பிள்ளை காலமானதால்காலியாகியுள்ள கூட்டணியின் பொருளாளர் பதவியும் திரு. தர்மலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நியமனக்குழுவில் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், எம் சிவசிதம்பரம், ரி. சிவசிதம்பரம், ஆர். சம்பந்தர் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (ம-இ)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் - கதிர்காமத்தம்பி

கருகம்பனை சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். கணக்காய்வாளர் பகுதி) 9-3-1981 அன்று காலமானர். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தமயந்தி, சஞ்சயன், ஆகியோரின் அன்புத் தந்தையும், நமசிவாயம் (ஆசிரியர் நடேஸ்வராக் கல்லூரி), டாக்டர் பொன்னம்பலம் (அரசாங்கமருத்துவமனை, யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி கமலாம்பிகை பொன்னம்பலம், திருமதி இராஜேஸ்வரி செந்திவேல்ராஜா, ஜெகதீசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், தண்டிகை சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) திருமதி ஞானேஸ்வரி ஆகியோரின் மருமகருமாவார், அன்னரின் ஈமக்கிரிகைகள் 9-3-81 அன்று மாலை கிரிமலையில் நடைபெற்றது 8842


**மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.**
**MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD**
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ★ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ★ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்! உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிடட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.


## மரண அறிவித்தல்

### பகீரதி ஏரம்பமூர்த்தி

பகீரதி (செல்லா) காலமாகி விட்டார். இவர் ஓய்வு பெற்ற யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் ஏரம்பமூர்த்தியின் மனைவியும், எஸ். சேதுராமலிங்கம் செட்டியாரின் சகோதரியும், சிவகுமார்; பத்மினி, சக்திகுமார், சாந்திகுமார், பாமினி, செந்தில்குமார், செல்வகுமாரி, ஸ்கந்தகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் தாயாரும் செல்வரத்தினம் ராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக நாளை (11 - 04 - 81) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அராலி வீதி, 'குமாரவயல்' இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும் 8838


யாழ். நகரில் இன்று கோலாகலத் திறப்புவிழா



# ஐடியல் ஏஜென்சி



இன்று 10-4-81 வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10-24 வரையுள்ள சுபவேளையில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்படும். அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**எங்களிடம்**

- ★ சகல எசன்ஸ் கலர்ப்பவுடர் வகைகளும்
- ★ கேக் தயாரிக்கத் தேவையான பொருட்களும்
- ★ பேக்கரியாளர்கள், கிறீம் ஹவுஸ் உரிமையாளர்களுக்குத் தேவையான பொருட்களும்
- ★ பழரச குளிர்பானத் தயாரிப்பாளர்கள், சிறுகைத்தொழிலாளர்களுக்குத் தேவையான பொருட்களும்

இறக்குமதி செய்யப்பட்ட பழரச குளிர்பானங்கள் பிஸ்க்கட் வகைகள், இனிப்புவகைகள் பால்மா வகைகள் அனைத்தையும், சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

**IDEAL AGENCY**
**'ESSENCE CANAL'**
239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, ...-ம் இலக்க அச்சகத்தில் ஏப்பிரல் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QF 5946/76 The Eelanaadu ... Telegram "Eelanaadu" Phone: 389 : 6126